

வேலூர் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எஸ்.நாகராஜன் – ரேகா தம்பதியரின் மகள் பிரியதர்ஷினிக்கும் காட்பாடி சுப்பிரமணி – சுகாசினி ஆகியோரின் மகன் எஸ்.விக்னேஷ் சுக்கும் நடந்த திருமண நிகழ்ச்சியில் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் நேரில் சென்று வாழ்த்தினார்கள் அருகில் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

எங்களுக்கெல்லாம் தலைவர் பெரியார்தான்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

மு.க.ஸ்டாலின் : அவர் தொடர்ந்து இந்த வேலைகளைத்தான் செய்து கொண்டு இருக்கிறார். அது குறித்து நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறோம். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. வரும் 4 ஆம் தேதி வழக்கு வருகிறது. அப்போது தெரியும்!

பெரியார்தான் எங்கள் தலைவர்களுக்கெல்லாம் தலைவர்!

செய்தியாளர் – *பெரியார் மீது இன்னும் விமர்சனம் வைத்து வருகிறார்களே அது பற்றி.....*

மு.க.ஸ்டாலின் : பெரியாரை மரியாதை குறைவாக பேசக்கூடியவர்களுக்கெல்லாம் நான் மரியாதை கொடுக்க தயாராக இல்லை. ஏன் என்றால், பெரியார் தான் எங்களுக்கு தலைவர். எங்கள் தலைவர்களுக்கெல்லாம் தலைவர் அவர்தான். அதனால், அதை நாங்கள் பெரிதுப்படுத் தவும் தயாராக இல்லை. பொருட்படுத்தவும் தயாராக இல்லை.

கேள்வி – ஈரோடு சட்டமன்ற இடைத்தேர்தல் பற்றி....

மு.க.ஸ்டாலின் : 5 ஆம் தேதி தேர்தல், 8 ஆம் தேதி தேர்தல் முடிவு. அப்போது தெரியும்.

செய்தியாளர் – *ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் உங்களுடைய எதிர்பார்ப்பு என்ன. கடந்த முறை தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதாக அறிக்கை வெளியிட்டிருந்தீர்கள். அது பற்றி.....*

மு.க.ஸ்டாலின் : நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்றது. அதில் தீர்மானம் போட்டு இருக்கிறோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபையில் தமிழ்நாட்டின் கோரிக்கைகள் குறித்து வலியுறுத்த சொல்லியிருக்கிறோம். பார்ப்போம். நிதிநிலை அறிக்கை வெளியிட்ட பிறகு தான் என்ன என்பது தெரியும்.

சட்டம் – ஒழுங்கு சிறப்பாகவே உள்ளது!

செய்தியாளர் – *சட்டம் - ஒழுங்கு குறித்து எதிர்கட்சிகள் தொடர்ந்து கேள்வி எழுப்பி வருகிறார்கள். அது பற்றி.....*

மு.க.ஸ்டாலின் : வேண்டுமென்றே திட்டமிட்டு அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெறும் சில சம்பவங்களை பெரிதாக பூதாகரமாக்குகிறார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எங்களைப்பொறுத்தவரை சட்டம்ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது. அதனால் தான் வெளிநாட்டில் இருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் தொழிற்சாலைகள் எல்லாம் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின்அவர்கள்பேட்டியளித்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி, திருவோணம் ஒன்றியங்களில்

மக்களுடன் முதல்வர் திட்டம் - 137 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் – முனைவர் கோவி. செழியன் வழங்கினார்!

தஞ்சாவூர், பிப்.1

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி, திருவோணம் ஒன்றியங்களில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம்களில் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகளில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் துவக்கி வைத்து 137 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடிய 27 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் ஒட்டங்காடு ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம் மற்றும் நடுமனைக்காடு அரசு நிகழ்ச்சி, கல்லூரணிக்காடு ஊராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பு, திருச்சிற்றம்பலம் ஊராட்சியில், பாரதி நகர் ஆதிதிராவிடர் குடியிருப்பு, செருவாவிடுதி ஊராட்சியில் மேல ஆதிதிராவிடர் குடியிருப்பு, இடையாத்தி ஊராட்சியில் கொடிமரம் ஆதிதிராவிடர் குடியிருப்பு, திருவோணம் ஒன்றியம் வெட்டுவாக்கோட்டை ஊராட்சியில் தட்டாங்கொல்லை ஆதிதிராவிடர் குடியிருப்பு ஆகிய 6 இடங்களில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் 29.01.2025 அன்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் தலைமை வகித்தார்.

பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணாதுரை, பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிகளில் பேராவூரணி ஒன்றியம் ஒட்டங்காடு ஊராட்சியில் 278 மனுக்களும், செருவாவிடுதி ஊராட்சியில் 196 மனுக்களும், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் 167 மனுக்களும், கல்லூரணிக்காடு ஊராட்சியில் 172 மனுக்களும், இடையாத்தி ஊராட்சியில் 301 மனுக்களும், வெட்டுவாக்கோட்டை ஊராட்சியில் 364 மனுக்களும் ஆக மொத்தம் 1476 கோரிக்கை மனுக்களை பொதுமக்களிடம் இருந்து பெற்று மனுக்களை பதிவு செய்து சிறப்பு முகாமினை பார்வையிட்டு பதிவு செய்ய வந்த மக்களிடம் கோரிக்கைகள் குறித்து விவரங்களை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கேட்டறிந்தார்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.1,06,000 மதிப்பில் 1 பயனாளிக்கு மின்கலன் பொருத்தப்பட்ட மின்கலனால் இயங்க கூடிய சக்கர நாற்காலி, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு காப்பீட்டிற்கான அட்டைகள், திருவோணம் ஒன்றியத்தில் 52 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குரூ.2,47,33,000, பேராவூரணி ஒன்றியத்தில் 81 பயனாளிகளுக்கு ரூ.2,78,85,000 ற்கான காசோலையினையும் ஆக மொத்தம் 137 பயனாளிகளுக்கு ரூ.5,27,24,000 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மூன்றாம் கட்டமாக ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 6 ஊராட்சிகளில் நடைபெறுகிறது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஏழை எளியோர் நலன் காக்க ஏராளமான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைபெண் திட்டம், தமிழ்ப் இன்னுயிர் காப்போம், தமிழ்ப் புதல்வன் திட்டம், விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற திட்டங்கள் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கல்வி வளர்ச்சியில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

தாழ்த்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் கல்வி உரிமை பெறுவதற்கு சட்டப் பாதுகாப்பையும் சமூக நீதியினையும் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பெற்றுத் தந்தார்கள். சமூக நீதியினையும் கல்வி உரிமையினையும் தொடர்ந்து அக்கறையுடன் முதலமைச்சர் அவர்கள் காப்பாற்றி வருகிறார்.

பல்வேறு திட்டங்களின் மூலம் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் மக்களை தேடி மக்களது குறைகளை களைய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் இத்திட்டங்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) சங்கர், ஊராட்சிகள் உதவி இயக்குநர் சதாசிவம், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் ரவிச்சந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்ட

அயலக அணி துணை அமைப்பாளர் நாகராஜன் இல்லத் திருமணம்!

அமைச்சர்கள் துரைமுருகன் – ஆர்.காந்தி நேரில் வாழ்த்தினார்கள்!

வேலூர், பிப். 1 -

வேலூர் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எஸ்.நாகராஜன் ரேகா ஆகியோரின் மகள் என்.ஆர் பிரியதர்ஷினி காட்பாடி அம்மாவாரி பள்ளி சுப்பிரமணி சுகானி மகன் விக்னேஷ் திருமணம் காட்பாடி அடுத்த பிரம்மபுரம் பாரஸ் மஹாலில் நடந்தது. திருமணத்தில் கழக பொது செயலாளரும் நீர்ப்பாசனம் ,கனிமம் மற்றும் சுரங்க துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, ஆகியோர் நேரில் சென்று வாழ்த்தினார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ , மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், புரவலர் துரை சிங்காரம், காட்பாடி ஒன்றிய குழு துணை தலைவர் சரவணன், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், பொதுக்குழு உறுப்பினர் தயாநிதி, பகுதி செயலாளர் வன்னிய ராஜா, பொதுக்குழு உறுப்பினர் ஜி.லோகநாதன்,

சேண்பாக்கம் பகுதி செயலாளர் முருக பெருமாள், காந்திநகர் பகுதி செயலாளர் பரமசிவம், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், ஒன்றிய கழக செயலாளர்கள்

சி.எல்.ஞானசேகரன், கே.கருணாகரன், எஸ்.தணிகாசலம், சி.ரவி, கே.முருகேசன் , திருவலம் பேரூர் செயலாளர் நேரு, பிரம்மபுரம்ஊராட்சி மன்ற தலைவர் ராதா கிருஷ்ணன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எம்.டீக்காராமன், மாமன்ற உறுப்பினர்கள் அ.அன்பு, ஜி.ரவிக்குமார்,

டீட்டா சரவணன், மாவட்ட கவுன்சிலர் சுலோச்சனா கிருபாகரன், காட்பாடி தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கே.தரணி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

தமிழ்நாட்டில்

மாவட்ட ஆட்சியர்கள் பணியிட மாற்றம்!

சென்னை, பிப்.1-

தமிழ்நாட்டில் திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஆட்சியர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களின் ஆட்சியர்களை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

தமிழக தொழில்நுட்பக் கல்வி ஆணையராக இன்னசன்ட் திவ்யா நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருவள்ளூர் ஆட்சியராக பிரதாப், திருவாரூர் ஆட்சியராக சிவசௌந்தரவள்ளி, சேலம் பட்டு வளர்ப்பு இயக்குநராக சாந்தி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநராக கண்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். திருவள்ளூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, விழுப்புரம், தருமபுரி மாவட்ட ஆட்சியர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், தருமபுரி மாவட்ட ஆட்சியராக ஐஏஎஸ் அதிகாரி சதீஷ் நியமனம் செய்யப்பட்டுள்ளார். திண்டுக்கல் மாவட்ட ஆட்சியராக சரவணன், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியராக தினேஷ் குமார், விழுப்புரம் மாவட்ட ஆட்சியராக ஷேக் அப்துல் ரஹ்மான் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியராக தர்ப்பகராஜ், திருப்பத்தூர் ஆட்சியராக மோகனசந்திரன், நெல்லை மாவட்ட ஆட்சியராக சுகுமார் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

விழுப்புரம் ஆட்சியராக இருந்த பழனி, அறநிலையத் துறை கூடுதல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். நகராட்சி நிர்வாக இணை ஆணையராக லலித் ஆதித்யா நீலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியராக சதீஷ், தொழிலாளர் நல ஆணையராக ராமன் நியமனம், தமிழக அரசின் பொதுத் துறை இணை ஆணையராக சரயு, தமிழக அரசின் மின் ஆளுமை முகமையின் இணைய தலைமை செயல் அலுவலர் ஸ்ருதன்ஜய் நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிதம்பரம் துணை ஆட்சியராக கிஷண் குமார், எம்டிசி மேலாண் இயக்குநராக பிரபு சங்கர், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை ஆணையர் மற்றும் செயலாளராக தட்சிணாமூர்த்தி, வணிகவரி இணை ஆணையராக பூங்கொடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை செயலராக பிரதீப் யாதவ், துணை முதல்வர் உதயநிதியின் செயலர் பிரதீப் யாதவுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பெண்கள் வேலை வாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட இயக்குநராக ஆர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு சாலை மேம்பாட்டு கழகத் திட்ட இயக்குநராக பாஸ்கர பாண்டியன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சென்னை குமரி தொழில் வழித்தட திட்டத்தின் மேலாண் இயக்குநராக கூடுதல் பொறுப்பும் வகிக்கிறார். தமிழக அரசின் வழிகாட்டி பிரிவு நிர்வாக இயக்குநராக தாரேஸ் அகமது நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் வழிகாட்டி பிரிவு நிர்வாக இயக்குநராக தாரேஸ் அகமது நியமிக்கப்பட்டுள்ளார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியராக சதீஷ், பேரிடர் மேலாண்மை ஆணையராக தாமஸ் வைத்தியன், பொருளாதார மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச் செயலர் மற்றும் ஆணையராக ஜெயா, கூட்டுறவுத் துறை கூடுதல் பதிவாளராக அம்ரித், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சிறப்புச் செயலராக கணேஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில் ஏற்பாடு!

இராமநாதபுரம், பிப்.1 -

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பேரூராட்சி தலைவர் டி.ராஜா ஆர்.ஜெயந்தி தம்பதியின் இல்ல திருமண விழா பிப் 2ம் தேதி குஞ்சார் வலசை ராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க சார்பில் கீழக்கரை கபாடி வீரர்கள் 750 பேருக்கு தலா 10 லட்சம் விபத்து காப்பீடு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள தி.மு.க இளைஞரணி செயலாளர்,தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இராமநாதபுரம் வருகை உள்ளார். அவருக்கு உற்சாக வரவேற்பளிக்க இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க சார்பில் ஏற்பாடுகள் மும்முர மாக நடைபெற்று வருகிறது.

இது குறித்து இராமநாதபுரம் தி.மு.க மாவட்ட செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ கூறியதாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு பிப் 1ம் தேதி மாலை 6 மணிக்கு வருகை துணை முதல்வருக்கு மாவட்ட எல்லையான பார்த்திபனூர் முதல் 2 கிலோ மீட்டர் தொலைவு வரை இரு புறங்களில் மின்ஒளி விளக்கும் அமைக்கப்பட்டு 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்சி தொண்டர்கள் திரண்டு வந்து இராமநாதபுரம் மாவட்டத்தின் பாரம்பரிய இசைக்கலைஞர்கள் இசை முழக்கத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னர் இராமநாதபுரம் அரசு விருந்தினர் மாளிகையில் தங்கி ஓய்வு எடுத்து பிப் 2ம் தேதி காலையில் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். அதனைத் தொடர்ந்து கீழக்கரையில் மாவட்ட திமுக சார்பில் ஏற்பாடுகள் கபாடி விளையாட்டு வீரர்களுக்கு தலா 10 லட்சம் மதிப்பிலான விபத்து காப்பீடு ஆணை வழங்குவதுடன்,அனைத்து வீரர்களுக்கும் விளையாட்டு உபகரணங்களை வழங்குகிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி, 127 வது வட்டக் கழக பாக முகவர்கள் ஆய்வுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பகுதிக் கழகச் செயலாளர் மு.ராசா எம்.சி. ஆகியோர் முன்னிலை வட்டக் கழகச் செயலாளர் பொன்.லோகு எம்.சி. தலைமையில் நடைபெற்றது. இதில் விருகம்பாக்கம் தொகுதிப் பார்வையாளர் வே.உமாகாந்த் ஆய்வு மேற்கொண்டு ஆலோசனை வழங்கினார். இதில் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் இல்லத் திருமண விழாவில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இவ்விழாவில் தியாகராயர் நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, மாவட்ட துணை செயலாளர் கே.மலர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.